RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-60 | 06 மார்ச் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தமிழகத்தில் விரைவில் 25 மினி ஸ்டேடியங்கள் அறிவிப்பு துணை முதல்வர் உதயநிதி தகவல்

சென்னை, மார்ச்.6

நடப்பாண்டில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 25 மினிஸ்டேடியங்கள் அமைப்பது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சட்டப்பேரவை தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கும் வகையில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, சேப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட அண்ணா சாலையில் உள்ள காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகே, ரூ.3 கோடி மதிப்பீட்டில் மினி ஸ்டேடியம் எனப்படும் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்டப்பட்டுள்ளது.

இதில் குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், பார்வையாளர்



இருக்கைகளுடன் கூடிய ஹாக்கி மைதானம், கிரிக்கெட் பயிற்சிக்காக 2 பாக்ஸ் கிரிக்கெட் மைதானம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. இந்த விளையாட்டு அரங்கை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்துவைத்து பார்வையிட்டார்.

இதேபோல், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, மதுரை மாவட்டம் சோழவந்தான், தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளில் தலா ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மினி ஸ்டேடியங்களையும் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "தமிழகத்தில் இதுவரை 9 மினி ஸ்டேடியங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டு 22 மினி ஸ்டேடியங்கள் உருவாக்குவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதற்கான டெண்டர்களும் கோரப்பட்டுள்ளன. இந்த பணிகள் எல்லாம் விரைவில் தொடங்கவுள்ளன. இந்த ஆண்டில் 25 மினி ஸ்டேடியங்கள் அமைப்பதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடவுள்ளோம். அந்தப் பணிகளை 2026 ஜனவரிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தயாநிதி மாறன் எம்.பி, விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


## '30 ஆண்டுக்கு தொகுதி மறுவரையறை கூடாது' அனைத்து கட்சி கூட்டத்தில் ஸ்டாலின் முன்மொழிந்த தீர்மானம்

சென்னை, மார்ச்.6

மக்களவை தொகுதி மறுவரையறை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது.

இதில், தொகுதி மறுவரையறையை 30 ஆண்டுகள் ஒத்திவைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட முக்கிய தீர்மானங்களை முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்தார். மேலும், தென்மாநில கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அனைத்து கட்சி கூட்டத்தில் பாஜக, தமாகா தவிர திமுக, அதிமுக, காங்கிரஸ், பாமக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதிமுக, விசிக, மனிதநேய மக்கள் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழக வெற்றிக் கழகம், கொங்குநாடு மக்கள் தேசிய



கட்சி, ஆதித்தமிழர் பேரவை, முக்குலத்தோர் புலிப்படை, மூவேந்தர் முன்னேற்றக்கழகம் என மொத்தமாக 56 கட்சிகள் பங்கேற்றன.

மதிமுக சார்பில் வைகோ, காங்கிரஸ் சார்பில் செல்வப்பெருந்தகை, அதிமுக சார்பில் ஜெயக்குமார், பாமக சார்பில் அன்புமணி ராமதாஸ், விசிக சார்பில் திருமாவளவன், இடதுசாரிகள் சார்பில் முத்தரசன், பெ.சண்முகம், மநீம சார்பில் கமல்ஹாசன், தவெக சார்பில் புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் கூறும்போது, "தொகுதி மறுவரையறை நடவடிக்கையால் தமிழகத்தில் மொத்தமாக 8 மக்களவைத் தொகுதிகளை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது தேசத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி உள்ள மாநிலங்களுக்கு கிடைத்துள்ள தண்டனையாக அமைந்துள்ளது. இது ஒட்டுமொத்த தென் மாநிலங்களுக்கும் ஏற்பட்டுள்ள அபாயம். அதனால் மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறையை எதிர்க்கும் நிலையில் உள்ளோம்.

இந்த விவகாரத்தில் கட்சி எல்லைகளை கடந்து அனைவரும் இணைய வேண்டும். தொகுதி மறுவரையறை நடவடிக்கையினால் தென் மாநிலங்களில் மக்களவை தொகுதிகளை குறைப்பது நம் குரலை நசுக்கும் முயற்சி. இது அரசியல் பிரதிநிதித்துவத்தின் மீதான நேரடி தாக்குதல். இந்த சதியை நாம் முறியடிக்க வேண்டும். தொகுதி மறுவரையறை என்ற கத்தி, தென்மாநிலங்களின் தலைக்கு மேல் உள்ளது" என பேசினார்.

கூட்டத்தில் முதல்வர் முன்மொழிந்த தீர்மானம்: தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை இந்த அனைத்து கட்சி கூட்டம் எதிர்க்கிறது. இது நியாயமற்ற செயல். 1971ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட தொகுதிகள் தொடர வேண்டும். தென் மாநில கட்சிகளின் பிரதிநிதி கள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு அமைக்கப்படும். மக்களவை தொகுதி மறுவரையறையை 30 ஆண்டுகள் ஒத்திவைக்க வேண்டும். இதற்கான உறுதியை பிரதமர் அளிக்க வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

## சென்னை விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, மார்ச்.6

சென்னை விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சென்னை விமான நிலையத்தில் சக்தி வாய்ந்த திரவ நிலை வெடி குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன என்று இண்டிகோ ஏர்லைன்ஸ்விமான நிறுவன அலுவலகத் துக்கு அதிகாலை இமெயில் வந்தது.

வெளிநாட்டிலிருந்து வந்த இந்த மிரட்டல் குறித்து உடனடியாக சென்னை விமான நிலைய இயக்குநர் அலுவலகம் மற்றும் போலீஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சென்னை விமான நிலையபாதுகாப்புக்குழு கூட்டம் நடத்தப்பட்டது. தொடர்ந்து, சென்னை விமான நிலைய வெடிகுண்டு நிபுணர்கள், அதிரடிப் படையினர், மோப்ப



நாய்கள் உதவியுடன் தீவிர சோதனைகளில் ஈடுபட்டனர்.

சென்னையிலிருந்து அந்தமான், டெல்லி, மும்பை உள்ளிட்ட சில இடங்களுக்கு புறப்பட இருந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. இது வழக்கமான புரளி என்பதை பாதுகாப்பு அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இது தொடர்பாக சென்னை விமான நிலையப் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால், சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

## தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் இணைந்து தவெக போராடும்! விஜய் அறிவிப்பு

சென்னை, மார்ச்.6

நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாகத் தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாடு என்ன என்பதை அக்கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"நம் அரசியல் சாசனத்தின் 84வது சட்டத் திருத்தத்தின்படி நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்பு 2026ம் ஆண்டு வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, வரும் ஆண்டிற்கு பிறகு இந்த மறுசீரமைப்புப் பணி, ஒன்றிய அரசால் தொடங்கப்பட வாய்ப்புள்ளது. எவ்வகையில் இந்த மறுசீரமைப்பு நடைபெறும் என்பது பற்றி எந்த ஒரு தெளிவான விளக்கமோ வாக்குறுதியோ மாநிலங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

தற்போதைய நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மாற்றாமலோ அல்லது இன்னொரு அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்தியோ இந்த மறுசீரமைப்பு நடைபெறலாம். எந்த முறையைப் பின்பற்றினாலும் அதில் "மாநிலங்களின் மக்கள் தொகை" என்பது ஒற்றை அளவுகோலாக இல்லாவிடினும் முக்கிய அளவுகோலாக இருக்கும் என்பது பட்டவர்த்தனமான உண்மை.

நம் அரசியல் சாசனத்தின் 81 வது சட்டப்பிரிவு, நாட்டிலுள்ள



ஒவ்வொரு மக்களவை உறுப்பினரும் கூடுமான வரையில் "சமஎண்ணிக்கையிலான மக்களுக்குப் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இதற்கு அடிப்படையான 'One vote-one value' என்பது ஒரு ஜனநாயகக் கோட்பாடு. ஆனால் அதே சமயம் இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட கூட்டாட்சி நாட்டில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பதும் ஒரு முக்கியமான ஜனநாயகக் கோட்பாடாகும். இந்த இரு கோட்பாடுகளையும் முடிந்தவரையில் ஒன்று மற்றொன்றை அதிகம் பாதிக்காத வகையில் நடைமுறைப் படுத்த முயல வேண்டும்.

புதிதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் மட்டுமோ அல்லது புதிய மக்கள் தொகையை ஒரு முக்கிய அளவுகோலாகக் கொண்டோ நிகழ்த்தப்படும் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பில் தென் மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறையும் ஆபத்து உள்ளது.

கடந்த 50 ஆண்டுகளாகக் கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டில் முதலீடு செய்து, தனது மக்கள்தொகை வளர்ச்சியைத் திறம்படக் கட்டுப்படுத்தியுள்ள தமிழ்நாடு மற்றும் இதர தென்மாநிலங்களுக்கு இது ஒரு பெரும் தண்டனையே அன்றி வேறு இல்லை. ஏற்கெனவே ஒரு மாநிலத்தில் இருந்து மட்டும் 80 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதால், அது மற்ற மாநிலங்களை விடக் கூடுதல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. இந்த வேறுபாடு மேலும் அதிகரிக்கக் கூடாது. தென் மாநிலங்களுக்கு ஒப்பீட்டளவில் தொகுதிகள் மேலும் குறைக்கப்பட்டாலோ அல்லது உத்தரப் பிரதேசம், பிஹார் போன்ற வட மாநிலங்களுக்கு ஒப்பீட்டளவில் கூடுதலாகத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டாலோ அது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது ஆகும்.

நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்பை ஒன்றிய அரசு தன்னிச்சையாக முன்னெடுக்குமானால், அது தென் மாநிலங்களின் அரசியல் முக்கியத்துவத்தை முற்றிலும் அழிப்பதற்கான முயற்சியாகவே பார்க்கப்படும். ஒரு சில வட மாநிலங்களில் மட்டும் வெற்றி பெற்று, ஒன்றியத்தில் ஆட்சி அமைத்து விடலாம் என்ற சூழ்நிலை உருவானால் அது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. இந்த மிக முக்கியமான தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் தமிழக வெற்றிக் கழகம், தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் தோளோடு தோள் நின்று இணைந்து போராடும்; மேலும் தமிழக வெற்றிக் கழகத்தின் தொண்டர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இறுதிமூச்சு உள்ளவரை தமிழகத்தின் நலனைக் காப்போம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தீமையிலும் ஒரு நன்மை என்பது போல் இந்தத் தலையாய பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலனுக்காக யார் இருக்கிறார்கள்; தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக யார் இருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்த இது உதவட்டும்.

அம்பேத்கர் அவர்கள் வழங்கிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை விழுமியங்களில் ஒன்று Federalism எனப்படுகிற 'கூட்டாட்சித் தத்துவ முறை'. ஆதலால் ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே இந்த மறுசீரமைப்பு பற்றிய முடிவை எடுக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்துகிறது. இதுவே நம் அரசியல் சாசனத் தந்தை அம்பேத்கர் அவர்களுக்கு நாம் செய்யும் உரிய மரியாதை ஆகும்" என அவர் தெரிவித்துள்ளார்.

## அமுமுக காற்றில் கரைந்த கற்பூரம் போல கரைந்து கொண்டிருக்கிறது! டிடிவி தினகரனுக்கு ஆர். பி. உதயகுமார் பதிலடி!

மதுரை, மார்ச்.6

சொந்த நலனுக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை பலவீனப்படுத்தி விட்டார் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், வருங்கால முதலமைச்சர், இந்த தாய் தமிழ்நாட்டு மக்கள் நம்பிக்கை நட்சத்திரமாக, ஒட்டுமொத்த தமிழக மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிற எடப்பாடியை பற்றி அமமுக பொதுச் செயலாளர் தினகரன் தொடர்ந்து கருத்துகளை தெரிவித்து வருகிறார் என ஆர்பி



உதயகுமார் விமர்சனம் செய்துள்ளார்.

ஆர். பி. உதயகுமார் பதிலடி:

தினகரன் இந்த கருத்தை சொல்வதற்கு முன்பு எதார்த்தத்தை அவர் புரிந்து கொண்டு பேசுகிறாரா? அல்லது புரிந்தும் புரியாதது போல் அவர் பேசி வருகிறாரா?, ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது அவர் 100 சகவீதம் விரக்தியில் தான் பேசுகிறார், இயலாமையில் பேசுகிறார் என்பது மட்டும் நமக்கு அவருடைய பேச்சிலே தெரிகிறது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்த, இரட்டை இலையை வீழ்த்த, அமுமுக என்ற கட்சியை தொடங்கினார்.

## CUET UG 2025 : இளங்கலை படிப்புகளில் சேருவதற்கான விண்ணப்பப் பதிவு தொடக்கம் தேர்வு தேதி அறிவிப்பு!

புதுடில்லி, மார்ச்.6

மத்திய பல்கலைக்கழகங்களில் இளங்கலை படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வான இளநிலை க்யூட் (சிஹிணிஜி ஹிநி 2025) தேர்விற்கான விண்ணப்பப் பதிவு தொடங்கியுள்ளது. கணினி வழியில் தேர்வு வரும் மே 8ம் தேதி முதல் தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை நடத்த தேசிய தேர்வு முகமை (ழிஜிகி) திட்டமிட்டுள்ளது.

இளநிலை க்யூட் தேர்வு 2025

நாடு முழுவதும் உள்ள 46 மத்திய பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் இளங்கலை படிப்புகளுக்கு க்யூட் நுழைவுத் தேர்வு தேசிய தேர்வு முகமையினால் நடத்தப்படுகிறது. அந்த வகையில் 202526 கல்வி ஆண்டிற்கான நுழைவுத் தேர்வு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதன்படி, மார்ச் 1 முதல் தொடங்கி மார்ச் 22ம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. தமிழ்நாட்டில் திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள பாண்டிசேரி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளில் சேர க்யூட் தேர்வு கட்டாயமாகும்.

மொத்தம் 37 பாடங்களுக்கு இத்தேர்வு நடத்தப்படுகிறது. ழிசிணிஸிஜி பாடத்திட்டத்தின் அடிப்படையில் தேர்வு நடைபெறும்.

க்யூட் தேர்வை 13 மொழிகளில் எழுதலாம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் தேர்வை எழுதலாம்.

### க்யூட் தேர்வு தகுதிகள்

12ம் வகுப்பு பொதுத்தேர்வை எழுதும் மாணவர்கள் க்யூட் தேர்வை எழுத தகுதியானவர்கள். மாணவர்கள் தாங்கள் விரும்பிய பாடங்களில் அதிகபடியாக 5 பாடங்கள் வரை தேர்வு செய்யலாம்.

https://cuet.nta.nic.in/ என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்திற்கு செல்லவும்.

### விண்ணப்பக் கட்டணம்

3 பாடங்கள் வரை தேர்வு செய்ய பொதுப் பிரிவினருக்கு ரூ.1000, ஓபிசி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் ரூ.900, எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.800 மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு ரூ.4,500 செலுத்த வேண்டும்.

## வார இறுதி நாட்களை முன்னிட்டு சொந்த ஊர்களுக்கு செல்ல சிறப்பு பேருந்துகள்! விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல்

சென்னை, மார்ச்.6

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து சென்னையில் படிப்பு மற்றும் வேலைக்காக மக்கள் தங்கி உள்ளனர். அவ்வாறு தங்கி இருக்கும் மக்கள் வார இறுதி நாட்களில் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். இதனை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு விரைவுப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் 07/03/2025 (வெள்ளிக்கிழமை), 08/03/2025 (சனிக்கிழமை) மற்றும் 09/03/2025 (ஞாயிறு) வார் விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டம்

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 07/03/2025 (வெள்ளிக்கிழமை) அன்று 265 பேருந்துகளும், அதேபோல் 08/03/2025 (சனிக்கிழமை) 270 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### சென்னை கோயம்பேடு

மேலும் சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 07/03/2025 வெள்ளிக்கிழமை அன்று 51 பேருந்துகளும் 08/03/2025 சனிக்கிழமை அன்று 51 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் மக்களின் வசதிக்காக பேருந்துகளை இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் மாதாவரத்திலிருந்து 07/03/2025 அன்று 20 பேருந்துகளும் 08/03/2025 அன்று 20 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மக்கள் அனைவரும் ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து மீண்டும் சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது .




தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் அஇஅதிமுக முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் .ஜெயலலிதா அவர்களின் 77 வது பிறந்தநாள் அன்று பிறந்த குழந்தைக்கு தங்க மோதிரம் மற்றும் மருத்துவமனையில் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் தமிழ்நாடு சட்டமன்ற எதிர் கட்சி துணைத் தலைவர் உதயகுமார் வழங்கினார் உடன் தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ராஜா கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜலட்சுமி கடையநல்லூர் நகர செயலாளர் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி தனியார் திருமண மண்டபத்தில் பெட்டிஷன் மேளா இன்று மானாமதுரை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் நிரேஷ் தலைமையில் நேற்று நடைபெற்றது.மானாமதுரை காவல் ஆய்வாளர் ரவீந்திரன், மானாமதுரை மற்றும் சிப்காட் சார்பு ஆய்வாளர்கள் பொதுமக்களின் புகார்களை விசாரித்து தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டார்..



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தொண்டியார் வீதியில் அமைந்துள்ள தி.ராம. சாமிவீடு பழனி ஆண்டவர் கோவிலில் மாசி மாத கார்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை அன்னதானம் நடைபெற்றது..



சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ராம்நகர் ஸ்ரீ பாலமுருகன் கோவிலில் புதன்கிழமை சஷ்டியை முன்னிட்டு சிறப்பு அபிஷேக் ஆராதனைகள் நடைபெற்றது. முன்னதாக விநாயகருக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். பின்னர் ஸ்ரீ பாலமுருகனுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், தேன்,பஞ்சாமிர்தம்,இளநீர்,பன்னீர்திருநீர், 11வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. அபிஷேகங்களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர்.திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள பகைவரை வென்றான் கிராமத்திற்கு முறையாக குடிநீர் வசதி இல்லாததால் கொந்தளித்த பொதுமக்கள் எங்கள் கிராமத்திற்கு குடிநீர் தட்டுப்பாடு இன்றி சீராக வழங்க கோரி இளையான்குடி பேரூராட்சி அலுவலகத்தில் நேற்று தீடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.உடன் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ், மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி, மாவட்ட ஊரக முகமையின் திட்ட இயக்குநர் மலர்விழி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..

# பம்மல் பகுதி அதிமுக சார்பில் ஜெயலலிதா பிறந்தநாள் பொதுகூட்டம் நலத்திட்ட உதவிகளை வழங்கிய கட்சி நிர்வாகிகள்

பம்மல் மார்ச்.6

சென்னை பல்லாவரம் அடுத்த பம்மல் பெரியார் நகர் பகுதியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா. அவர்களின் 77வதுபிறந்தநாளை முன்னிட்டு பம்மல் பகுதிகழக செயலாளர் அப்பு என்கின்ற வெங்கடேசன் தலைமையில் நலத்திட்ட வழங்கிபொதுகூட்டம் நடைபெற்றது.



கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் இராசேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், தலைமை கழக பேச்சாளர்கள் ஹமீதா, ஜெயசீலன் கலந்து கொண்டு அதிமுக ஆட்சியில் நடைபெற்ற நலத்திட்டங்கள் குறித்தும், ஜெயலலிதா ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை கிடப்பில் போடப்பட்டன.

மேலும் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேசுகையில் திமுக ஆட்சியில் காவல்துறைக்கு மரியாதையும் இல்லை, அரசு அதிகாரிகளுக்கு பாதுகாப்பும் இல்லை எனவும் தாம்பரம் மாநகராட்சி ஊழியர்களுக்கு சரிவர ஊதியம் வழங்வில்லை என கேட்டதற்கு திமுக நிர்வாகம் சரியில்லை என குற்றம் சாட்டினார்.

இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்கள் 1000த்திற்கு மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை தையல் மிஷின், அயன்பாக்ஸ், சேலைகள் வழங்கப்பட்டன. இதில் முன்னாள் துனைத் தலைவர் ஜெயபிரகாஷ் மற்றும் மாவட்ட அண்ணா தொழிற்சங்க மாவட்ட தலைவர் பி.எஸ். ஆர்.சரவணராஜ் தெற்கு பகுதி நிர்வாகிகள் 10வது வட்ட கழக செயலாளர் சரவணன், அவைத் தலைவர் தண்டபாணி, அனிஷ் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பம்மல் நரேஷ்., கிஷோர்குமார், சொக்கலிங்கம், பன்னீர்செல்வம். வினோத், உட்பட 1000 த்திற்க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# குண்டடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.10.53 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை அமைச்சர்கள் துவக்கி வைத்தனர்

திருப்பூர் மார்ச் 06

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ருத்ராவதி பேரூராட்சி பகுதியை சார்ந்த 106 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நேற்று (04.03.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் இலவச வீட்டு மனைப்பட்டாகளை வழங்கினார்.தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத் திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, விடியல் பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி, விவசாயக்கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், நான்முதல்வன் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், மக்களை தேடி மருத்துவம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் பல்வேறு நாடுகளிலிருந்து தொழிற்சாலைகளை கொண்டு வந்து வேலை வாய்ப்பு அதிகரிக்கப்பட்டு பொருளாதாரம் உயர்ந்துள்ளது.

மேலும், கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் ரூ.3.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதை இலக்காக வைத்து செயல்படுத்தி வருகிறார்கள். முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்த கன்கிரீட் வீடுகள் கட்டித்தரும் முன்னோடி திட்டத்தை விரிவுபடுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் குடிசைகள் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உருவாக வேண்டும் என்ற அடிப்படையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தினை உருவாக்கி வீடுகள் கட்டபட்டு வருகிறது. தாழ்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்த மக்களுக்கு இடஒதுக்கீடு கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த இடஒதுக்கீட்டினால் இன்று மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், பல்வேறு உயர் அலுவலர்களாக தேர்ச்சி பெற்று அவர்கள் வாழ்வு மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடன் மற்ற விவாசயிகளை பாதிக்காத வகையில் உப்பாறு அணை மற்றும் வட்டமலை நீர் தேக்கத்திக்கு தண்ணீர் கொண்டுவருதல், பரம்பிக்குளம் அழியாறு திட்டத்தின் கீழ் காண்டூர் கால்வாய் வழியாக 50 கிலோ மீட்டர் நீளத்திற்கு திருமூர்த்தி அணைக்கு வருகிறது. தொடர்ச்சியான நீர் ஒட்டம், நீண்ட கால உபயோகம் மற்றும் தட்ப வெப்பநிலை காரணமாக பெரும்பாலான இடங்களில் கால்வாய் சேதமடைந்துள்ளது. 1200 கன அடி தண்ணீர் திறந்து விட்டால் கசிவு காரணமாக பாதி தண்ணீர் கூட வந்து சேராமல் இருந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் ரூ.185.00 கோடி மதிப்பீட்டில் முழுவதுமாக கான்கிரீட் தளம் அமைக்க உத்தரவிட்டார்கள். தற்போது 1200 கன அடி தண்ணீர் திறந்து விட்டால் 1100 கன அடி தண்ணீர் வந்தடைகிறது. மேலும் கேரளா அரசுடன் இணைந்து நல்லாறு நீராறு திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரி வித்தார்.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ருத்ராவதி பேரூராட்சிகுட்பட்ட மோளரபட்டி, பெல்லம் பட்டி, எரகாம்பட்டி, கொக்கம் பாளையம், காசிலிங்கம் பாளையம், மானூர்பாளை யம், நவனாரி, பெரியகுமார பாளையம், வேலயுதம் பாளையம், சூரியநல்லூர், புங்கந்துறை ஆகிய பகுதியை சார்ந்த 106 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக் களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் குண்டடம் ஊராட்சி ஒன்றியம், நவனாரி ஊராட்சி, கள்ளிப்பாளையத்தில் நீர்வளத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.7.57 கோடி மதிப்பீட்டில் உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி, நவனாரி ஊராட்சி, கள்ளிப்பாளையத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் கா சிலிங்கம்பாளையம் முதல் நிராயூர் சாலை வரையிலும், ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் மானூர்பாளையம் கருப்பட்டிபாளையம் சாலை முதல் தொட்டியன்துறை வரை யிலும் சாலை மேம்படுத்தும் பணி என மொத்தம் ரூ.10.53 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தாரா புரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா , திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், கண்காணிப்பு பொறியாளர் (நீர்வளத்துறை) கார்த்திகேயன், செயற்பொறியாளர் மகேந்திரன், தாராபுரம் வட்டாட்சியர் திரவியம், உதவி பொறியாளர் பாபு, இளநிலைப் பொறியாளர் விஜயசேகர் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திமுக இளைஞரணி சார்பில் இந்தி திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம்! ஒன்றிய அரசை கண்டித்து சின்னமனூரில் பொதுக்கூட்டம்



சின்னமனூர், மார்ச்.6

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள ஓடைப்பட்டியில் தேனி தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் இந்தி திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறு சீரமைப்பில் அநீதி காட்டிவரும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது

மாபெரும் கண்டன பொதுக் கூட்டத்திற்கு சிறப்புரை ஆற்றிய ராஜ கம்பீரன் அப்பாஸ் கழக இளம் பேச்சாளர் சிந்துஜா கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் செல்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசு கொண்டுவரும் மும்மொழி கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன உரையாற்றினர்

முன்னதாக பொதுக்கூட்டத் திற்கு வருகை தந்த பேச்சாளர் களுக்கு ஓடைப்பட்டி பேரூர் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு மேடையில் தமிழ் வாழ்க தமிழ்நாடு வாழ்க என உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

# வாடிப்பட்டியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு! எம் எல் ஏ பங்கேற்பு



சோழவந்தான் மார்ச் 6

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தனியார் மஹாலில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் எம் எல் ஏ பங்கேற்று சிறப்பு செய்தார் வாடிப்பட்டி பேரூராட்சி தலைவர் பால்பாண்டியன் துணைத் தலைவர் வக்கீல் கார்த்தி சோழவந்தான் பேரூராட்சி தலைவர் எஸ் எஸ் கே ஜெயராமன் ஒன்றிய செயலாளர்கள் வாடிப்பட்டி வடக்கு பால ராஜேந்திரன் தெற்கு பசும்பொன் மாறன் வாடிப்பட்டி முன்னாள் பேரூர் செயலாளர் மு பா பிரகாஷ்மாவட்ட பிரதிநிதி பேட்டை பெரியசாமி ஊத்துக்குளி ராஜா மற்றும் சமூக நலத்துறை அலுவலர்கள் கர்ப்பிணி தாய்மார்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# அலங்காநல்லூர் அருகே சிறு விளையாட்டு அரங்கம் திறப்பு விழா



அலங்காநல்லூர், மார்ச்.6

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே சின்னஇலந்தைகுளம் கிராமத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் ரூ.3 கோடி மதிப்பில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதற்கு நன்றிதெரிவித்தும் இதை பயன்பாட்டிற்கு கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களுக்கும். தமிழ்நாடு துணை முதல்வருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பரிந்துரை செய்த வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் அவர்களுக்கும் தங்களது நன்றியினை தெரிவிக்கும் வகையில் சின்ன இலந்தைகுளம் திமுக இளைஞர் அணி முருகேசன் என்ற கார்த்திக் தலைமையில் நிர்வாகிகள் ராம்குமார், வசந்த், புவனேஸ்வரன், நாகராஜன், அறிவழகன் ஆகியோர் பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.



தேனி மாவட்டம் கம்பம் முகைதீன் ஆண்டவர் புரத்தில் உள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மக்களைத்தேடி மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது.முகாமில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் சார்பில் பொதுமக்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டது. இலவச டிஜிட்டல் எக்ஸ் ரே வாகனம் மூலமாக மருத்துவர் , செவிலியர்கள் பரிசோதனை செய்தனர்.11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கம்பம் ஏ.சாதிக் முன்னிலையில் பொதுமக்கள் ஏராளமானோர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



மதுரை மாவட்டம் அலங்கா நல்லூர் தனியார் மண்டபத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தலைமை தாங்கி குத்துவிளக் கேற்றி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அலங்காநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சுமார் 200க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைகள் உணவுகள் வழங்கப்பட்டன.



மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் கரூர் மாவட்டம், கரூர் வட்டம், குள்ளம்பட்டியில் துணிநூல் துறையின் சார்பாக புதிதாக கட்டப்பட்ட சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காவையும் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு செயலர் வே.அமுதவள்ளி, கைத்தறி துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை இயக்குநர், இரா.லலிதா, மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ(அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி(கிருஷ்ணராயபுரம்).கரூர் மாநகராட்சி மேயர் வெ.கவிதா ஆகியோர் உள்ளனர்.

# முல்லைப்பெரியாறு அணை ஆய்வு ஒத்திவைப்பு



கம்பம்,மார்ச்.06:

முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்பு 5 பணிகளை ஆய்வு செய்ய புதியதாக அமைக்கப்பட்ட மத்திய கண்காணிப்பு குழு ஆய்வு மார்ச் 22 க்கு ஒத்திவைக் கப்பட்டது.

இந்த அணையில் நடக்கும் பராமரிப்பு பணிகளை கண்காணிக்க உச்சநீதிமன் றம் பரிந்துரையின்படி மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் ராகேஷ் காஷ்யப் தலை மையில் மத்திய கண்கா ணிப்பு குழு அமைக்கப் பட்டிருந்தது. இக்குழு ஆண்டுதோறும் அணைப்பகுதியில் ஆய்வுமேற் கொண்டுஅணையில்நடக்க வேண்டிய பராமரிப்பு பணிகள் குறித்து ஆலோ சனை வழங்கி வந்தது.

இந்நிலையில் 2024 அக்., 1 முதல் அணை தேசிய அணைகள் பாது காப்பு ஆணையத்தின் கட்டுப்பாட் டிற்குள் கொண்டு வரப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஏற்கனவே அணை பணிக்காக கப்பட்டிருந்த கண்காணிப்புதுணை பெரியாறு பராமரிப்பு அமைக் மத்திய குழு, கண்காணிப்பு குழு கலைக்கப்பட்டன

புதியதாக அணைகள் தேசிய பாதுகாப்பு ஆணைய தலைவர் அனில் ஜெயின் தலைமையில் 7 பேர் கொண்ட கண்கா ணிப்பு குழு அமைக்கப்பட் டது. இக்குழுவில் தமிழக அரசு சார்பில் நீர்வளத் துறை கூடுதல் தலைமை செயலர் மங்கத்ராம் சர்மா, காவிரி தொழில்நுட்ப குழு தலைவர் சுப்பிரமணியன், கேரள அரசுசார்பில் கூடுதல் தலைமை செயலர் விஸ்வாஸ், கேரளநீர்வளத்துறைதலைமை பொறியாளர் மற்றும் இரண்டு தொழில்நுட்ப வல்லுநர் கள் என 7 பேர் உள்ளனர்

புதிய கண்காணிப்பு குழுவினர் மார்ச் 7ல் அணைப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந் நிலையில் இக்குழுவின் முதல் ஆய்வு மார்ச் 22க்கு ஒத்திவைக்கப்பட்டதாக தமிழக நீர்வளத் துறை அறி வித்துள்ளது. இக்குழுவில் இடம்பெற்றுள்ள 2 கேரள அதிகாரிகளை நீக்க கோரி தமிழக விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் தற் போது குழுவின் ஆய்வு ஒத் திவைக்கப்பட்டது குழப் பத்தை ஏற்படுத்தியுள்ளது.



திருப்பூர் மாவட்டம் அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் நிறுவனர் தலைவர் ஜி.சுப்பிரமணியம் தமிழ்நாடு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களை திராவிட முன்னேற்ற கழகத்தின் திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக நியமனம் செய்தமைக்கு மரியாதை நிமித்தமாக விவசாயம் மற்றும் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரி வித்தனர்.இந் நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் ஸ்ட்ரீட்ஸ்மார்ட் EV இப்போது மிகவும் ஸ்டைலானதாகிவிட்டது: MG COMET BLACKSTORM ஐ அறிமுகப்படுத்துகிறது



மதுரை: மார்ச் 6

நாட்டின் முன்னணி மின்சார கார் தயாரிப்பாளரான JSW MG மோட்டார் இந்தியா, BLACK-STORM பதிப்பை COMET EV போர்ட்ஃபோலியோவுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது, இது இந்தியாவின் ஸ்ட்ரீட் ஸ்மார்ட் ணிகூஷி இன் பாணியையும் முறையீட்டையும் மேம்படுத்துகிறது. ரூ.7.80 லட்சம் + பேட்டரி வாடகை @ INR 2.5/km இன் எக்ஸ்ஷோரூம் விலையில் தொடங்கப்பட்ட சிளிவிணிஜி ஙிலிகிசிரி ஷிஜிளிஸிவி சிறந்த மாறுபாடாக நிலை நிறுத்தப்படும். ஸ்டைலான மற்றும் தொழில்நுட்ப ஆர்வமுள்ள நகர பயணியைத் தேடும் வாடிக்கையாளர்கள், இப்போது தங்கள் அருகிலுள்ள விநி டீலர்ஷிப்பைப் பார்வையிட்டு, புதியMG COMET BLACKSTORMஐ ரூ.11,000 செலுத்தி முன்பதிவு செய்யலாம்.

சிளிவிணிஜி BLACKSTORM அதன் 'ஸ்டாரி பிளாக்' வெளிப்புறங்கள் மூலம் நுட்பத்தையும் பாணியையும் வெளிப்படுத்துகிறது, இது காரின் ஒட்டுமொத்த முறையீட்டை மேம்படுத்துகிறது. COMET EV பெயர்ப்பலகை அடர் நிற குரோமிலும், INTERNET INSIDE சின்னம் கருப்பு நிறத்திலும் செதுக்கப்பட்டுள்ளது, இது பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்கிறது. ப்ளாக் தீம் உட்புறங்களில் 'பிளாக்ஸ்டார்ம்' என்ற வார்த்தையுடன் லீதரெட் இருக்கைகளில் சிவப்பு நிறத்தில் எம்பிராய்டரி செய்யப்பட்டுள்ளது, இது பிரீமியம் அனுபவத்தை உறுதி செய்கிறது. இசை ஆர்வலர்களுக்கு, நிறுவனம் இப்போது வால்மீன் BLACKSTORM ஐ 4 ஸ்பீக்கர்களுடன் பொருத்தியுள்ளது, இது போக்குவரத்து நெரிசல்களை கொஞ்சம் இனிமையாக்குகிறது. ஹூட்டின் கீழ், இந்த புதிய பதிப்பில் 17.4 kWh பேட்டரி பொருத்தப்பட்டுள்ளது, இது வேகமாக சார்ஜ் செய்வதை ஆதரிக்கிறது மற்றும் 230 கிலோமீட்டர்* சான்றளிக்கப்பட்ட வரம்பை வழங்குகிறது. தனித்துவமான பேட்ஜ், வீல் கவர் மற்றும் ஹூட் பிராண்டிங் மற்றும் ஸ்கிட் பிளேட்கள் போன்ற விருப்ப ஸ்டைலிங் கூறுகள் உள்ளிட்ட பிரத்யேக துணை பேக் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் COMET BLACKSTORMஐ மேலும் தனிப்பயனாக்கலாம்.

இது குறித்து JSW விநி மோட்டார் இந்தியாவின் விற்பனைத் தலைவர் ராகேஷ் சென் கூறுகையில், "நவீன இந்திய கார் வாங்குபவர்கள் தனித்துவமான மற்றும் அவர்களின் ஆளுமையின் பிரதிநிதித்துவமான தேர்வுகளைத் தேடுகிறார்கள். அவர்கள் தைரியமான வண்ண விருப்பங்களை நோக்கி ஈர்க்கிறார்கள், இது அவர்களை வேறுபடுத்துகிறது மற்றும் அவர்களின் தேர்வுகளை தனித்துவமாக்குகிறது. பாணி மற்றும் அதிநவீனத்தை உட்செலுத்துவதன் மூலம் அன்றாட பயணத்தை மேம்படுத்துவதாக உறுதியளிக்கும் COMET BLACK-STORMஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் வரிசையை தொடர்ந்து புதுப்பிப்பதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளை தொடர்ந்து பூர்த்தி செய்வதற்கான எங்கள் அர்ப்பணிப்பை COMET BLACK-STORM எடுத்துக்காட்டுகிறது.

MG COMET EV ஒரு நகர்ப்புற பயணிகள் விரும்பும் பாணியுடன் தேவைப்படும் செயல்பாட்டை ஒருங்கிணைக்கிறது, இவை அனைத்தும் பாதுகாப்பான மற்றும் ஸ்மார்ட் பேக்கேஜுக்குள் உள்ளன. COMET EVயின் விற்பனை சிசீ23 ஐ விட சிசீ24 இல் 29% சுவாரஸ்யமாக வளர்ச்சியடைந்தது, இது கார் வாங்குபவர்களிடையே அதன் வலுவான வரவேற்பைக் குறிக்கிறது. இது ஒரு ஸ்டைலான, சுற்றுச்சூழல் நட்பு இயக்கம் தீர்வைத் தேடும் நகரவாசிகளுக்கு விருப்பமான தேர்வாக அமைந்தது.



மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோயில்பாப்பாகுடி ஊராட்சியில் 40 இடங்களில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பேவர் பிளாக் மற்றும் கழிவுநீர் வாய்க்கால் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி வைத்து தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, கூடுதல் ஆட்சியர் மரு.மோனிகா ராணா ஆகியோர் உடன் உள்ளனர்.


## பள்ளிக்கரணையில் 189 வது வட்ட திமுக சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா

சோழிங்கநல்லூர் மார்ச்06

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 189வது வட்ட திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை அமைச்சருமான மா.சுபிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வாழ்த்துக்களுடன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற



உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ் முன்னிலையில் பள்ளிக்கரணை பேருந்து நிலையம் அருகில் காலை 9 மணிக்கு 189 வது மாமன்ற உறுப்பினர், வட்டக் கழகச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குழு உறுப்பினருமான, லயன். வ. பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் திராவிட முன்னேற்ற கழகக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, 1000ற்கும் மேற்பட்டோருக்கு அருஞ்சுவை உணவு பரிமாறி பிறந்த நாளை விழாவை கொண்டாடினர். மேலும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம் என்று பிறந்தநாள் விழாவில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.




சிவகங்கை மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் காளையார் கோயில் புனித மைக்கல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் வருகின்ற 06/03/2025 முதல் 09/03/2025 வரை நடத்தப்பட உள்ள தமிழ்நாடு தகுதி தேர்வில் 302 தேர்வாளர்கள் கணினி வழித் தேர்வு எழுத உள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் தலைமையில் மாவட்டத் தேர்வு கண்காணிப்பு குழு கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (மார்ச் 05) நடைபெற்றது..

## மார்ச் 5 ந் தேதி பிறந்தநாள் விழா காணும் ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிக்கு பாராட்டு

தாம்பரம் மார்ச்06

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த ராஜகீழ்பாக்கம் பகுதியில் வசிக்கும் சீதாராமன் இவர் காவல்துறையில் மிகச் சிறப்பாக பணியாற்றியவர் காவல்துறையில் பணியாற்றிய போது முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெயலலிதாவிடம் பாராட்டு விருதினை பெற்றார் அதனை தொடர்ந்து காவல்துறையில் ஓய்வு பெற்று எக்ஸ்னோரா என்ற அமைப்பில் மிகச் சிறப்பாக இந்த அமைப்பில் பணியாற்றி அவர் இரண்டாவது விருதை எக்ஸ்னோரா நிறுவனர் தலைவர் நிர்மல் விருதை பெற்றார் அது மட்டுமல்லாமல் கடந்த ஐந்தாண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் மறவாமல் பாரத பிரதமர் நரேந்திர மோடி ஜி அவர்களிடம் இருந்து மின்னஞ்சல் மூலமாக கடந்த ஐந்தாண்டு காலமாக அவர்களுக்கு




வந்தடைகிறது இதை அவர் ஒரு சாதனையாக கருதி மிக்க மகிழ்ச்சி அடைகிறார் என்று குறிப்பிட்டுள்ளார் அதனைத் தொடர்ந்து மக்கள் பணியில் மிகச் சிறப்பாக பணி ஆற்றுவேன் என்று அவர் கூறினார்..

## சிவகங்கை மாவட்ட பொது விநியோகத்திட்டத்தின் கீழ் மார்ச் 8 அன்று சிறப்பு முகாம்கள்! ஆட்சியர் தகவல்

சிவகங்கை, மார்ச்.6

சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத்திட்டத்தில் 2025ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 08.03.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.



இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொது மக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரத்தில் மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூலம் மாவட்ட அளவிலான அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையேற்று மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப் போட்டியினை துவக்கி வைத்தார்.

## சிவகங்கை கழனிவாசல் பகுதியில் ரூ.03.00 கோடி மதிப்பீட்டில் சிறு விளையாட்டரங்கத்தினை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்த துணை முதல்வர்

சிவகங்கை, மார்ச்.6

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால், காணொலி காட்சி வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில், காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழனிவாசல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தினை" திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் அவர்கள், காரைக்குடி பகுதியில் "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தில்" நடைபெற்ற விழாவில் பங்கேற்று, விளையாட்டு போட்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி முன்னிலையில், கழனிவாசல் பகுதியில் நடைபெற்ற திறப்பு விழாவில் பங்கேற்று சிறப்பித்து தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட கழனிவாசல் பகுதியில் சுமார் 9 ஏக்கர் பரப்பளவில் சிறப்பாக அமைந்துள்ள முதலமைச்சர்



சிறு விளையாட்டு அரங்கமும் ஒன்றாகும். குறிப்பிட்ட காலத்திற்குள் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கமானது இன்றையதினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழனிவாசல் பகுதியில் சிறப்பாக அமைந்துள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தை போன்று, விரைவில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியிலும், மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியிலும் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான பணிகளும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், விரைவில் தொடங்கி வைக்கப்படும்.

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் ஆர்வத்தை தூண்டுகின்ற வகையிலும், சாதனையாளர்களை உருவாக்குகின்ற வகையிலும் இம்மைதானங்கள் அமையும். விளையாட்டில் சிறந்து விளங்கி வரும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாநில, ஒன்றிய அரசுகளில் வேலைவாய்ப்பினையும் பெற்று வருகின்றனர். சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த விளையாட்டு வீரர்கள் மாநில அளவிலும், தேசிய அளவிலும் கால்பந்து உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்களில் சிறந்து விளங்கி சாதனை படைத்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு, சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த விளையாட்டு வீரர்களும் கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டிலும் சிறந்து விளங்கி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் அமைத்திடும் வகையில் சாதனை படைத்து, தமிழகத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துத்துரை அவர்கள், முன்னாள் அமைச்சர் தென்னவன் அவர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன், காரைக்குடி வட்டாட்சியர் ராஜா மற்றும் விளையாட்டுத்துறையைச் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கள்ளிமந்தயத்தில் சமுதாய வளைகாப்பு விழாவில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்டங்களை வழங்கிய உணவுத் துறை அமைச்சர்

திண்டுக்கல், மார்ச்.6

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் அம்மன் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 200 கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு சீர்வரிசைகளை வழங்கி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, நத்தம், சாணார்பட்டி ஆகிய வட்டாரங்களில் 101 பயனாளிகளுக்கு ரூ.97.46 இலட்சம் மதிப்பீட்டில் தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதி உதவிகளை வழங்கி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டப் பயனாளிகள் 101 நபர்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் கடனுதவிக்கான முன் அனுமதி ஆணைகளை வழங்கினார்.

விழாவில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், 200 கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு சீர்வரிசைகள் வழங்கினார். அதனைத்தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் 22 பயனாளிகளுக்கு தாலிக்குத் தங்கம் ரூ.13.38 இலட்சம்



மதிப்பீட்டிலும் மற்றும் திருமண நிதியுதவி ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டிலும், தொப்பம்பட்டி வட்டாரத்தில் 20 பயனாளிகளுக்கு தாலிக்குத் தங்கம் ரூ.12.17 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் திருமண நிதியுதவி ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிலும், நத்தம் வட்டாரத்தில் 42 பயனாளிகளுக்கு தாலிக்குத் தங்கம் ரூ.25.56 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் திருமண நிதியுதவி ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டிலும், சாணார்பட்டி வட்டாரத்தில் 17 பயனாளிகளுக்கு தாலிக்குத் தங்கம் ரூ.10.34 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் திருமண நிதியுதவி ரூ.6.25 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 101 பயனாளிகளுக்கு ரூ.97.46 இலட்சம் மதிப்பீட்டில் தாலிக்குத் தங்கம்(தலா 8 கிராம்) மற்றும் திருமண நிதியுதவி வழங்கினார். தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கள்ளிமந்தையம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்ட பயனாளிகள் 101 நபர்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி கள்ளிமந்தையம் கிளை சார்பில் வழங்குவதற்கான முன் அனுமதி ஆணைகளை வழங்கினார்.

இந்த விழாவில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் .அர.சக்கரபாணி பேசியதாவது:

திண்டுக்கல் மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் கீழ் செயல்படும் ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி வட்டாரத்தின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பாக 241 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்விரண்டு வட்டாரங்களில் உள்ள குழந்தைகள் மையங்கள் மூலமாக சுமார் 684 காப்பிணிகள், 733 பாலூட்டும் தாய்மார்கள், 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள 11,186 குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு, பழனி வருவாய் கோட்டாட்சியர்(பொறுப்பு) இரா.சக்திவேல், மாவட்ட சமூக நல அலுவலர் கோ.புஷ்பகலா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பூங்கொடி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபு பாண்டியன் தாஹிரா வட்டாட்சியர் சசி மற்றும் துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## நீர்வளத்துறை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட வளர்ச்சி பணிகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

கன்னியாகுமரி, மார்ச்.6

கன்னியாகுமரி மாவட்ட நீர்வள ஆதாராத்துறை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்து, வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டம் பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் மூலம் தண்ணீர் வசதி பெறும் பாண்டியன் கால்வாயில் 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மொத்தமுள்ள 1100 மீட்டரில் 38 மீட்டர் உடைப்பு ஏற்பட்டது. அது தற்காலிகமாக மண் மூட்டைகள் கொண்டு




அடைக்கப்பட்டு விவசாய பணிகளுக்காக தண்ணீர் சென்று கொண்டிருந்தது. மேற்படி தளத்தில் நிரந்தர வெள்ள தடுப்பு பணிக்காக ரூ.20 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, பணிகளை விரைந்து முடித்து விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தோவாளை வட்டத்திற்குட்பட்ட இறச்சகுளம் பகுதியில் அமைந்துள்ள விஷ்ணுபுரம் குளத்தில் 16.50 மீட்டர் நீளத்தில் ரூ.15 இலட்சத்தில் நிரந்தர வெள்ள சேத தடுப்பு பணிகள் நடைபெற்று வருவதையும், நாவல்காடு கிராமத்தில் பூக்குழி குளத்தில் வண்டல் மற்றும் களிமண் எடுக்கப்பட்டு வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.1.64 கோடி மதிப்பில் பூதப்பாண்டி பேரூராட்சிக்குட்பட்ட திட்டுவிளை பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிலைய வணிக வளாகத்தினை நவீனமயமாக்கும் கட்டுமான பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதோடு, பணிகளை தரமானதாகவும், உறுதிதன்மையுடன் கட்டப்பட்டு வருவதை துறை சார்ந்த அலுவலர்கள் உறுதிப்படுத்துவதோடு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற ஆய்வில் கோதையாறு வடிநிலக்கோட்டம் உதவி செயற்பொறியாளர் மா.மூர்த்தி, உதவி பொறியாளர் அஜீஸ், தோவாளை வட்டாட்சியர் கோலப்பன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161